Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு

மலர் 31 | விளம்பி வைகாசி • 1958 மே | இதழ் 5

“ அப்பர் - அருள்மொழி ”

மா. ப. தியாகன், பி.ஏ.

“ ஊனமிகு வாழ்க்கை வாழ்வதோர் வாழ்வு வேண்டேன். வறுமையால் ஊனம்; பிணியால் துன்பம்; தீக்குணத்துட்டர்களால் அச்சம், ஊர்திகள் கவிழ் விபத்துக்கள்; இதன் இடையே மனிதவாழ்வு. இப்படித்தான் மனிதன் வாழவேண்டுமா? இவை நீங்க வழி உண்டா? என்று யோசித்த பெருமக்களுள் அப்பர் சுவாமிகள் ஒருவர். அவர்கண்ட உண்மை; உபதேசித்த அருள்மொழி.

– “ ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை ” என்பது. எதோடு ஒன்றுவது? “ சிற்றம்பலத்து நட்டம் என்றுவந்தாய் என்னும்எம்பெருமான்தன் திருக்குறிப்பே.” அத்திருக்குறிப்பு தில்லையுட்கூத்தனது அபயகரத்தை நினைப்பூட்டுகிறது. அபயமளிக்கத் தில்லையுட் கூத்தனுளன் என்று மனம் அவனுடைய திருவிளையாடல்களில் ஒன்றிநிற்குமாயின் அதில் எழும் நினைவுகள் “ நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்; நரகத்திலிடர்ப்படோம், ஏமாப்போம், பிணி அறியோம் ” என்றபடி அஞ்சா நிலைமையிலெழும். “ இறைவனின்னருளால் நிகழ்கின்றது இவ்

வுலகம்." "அவனன்றி ஓரணுவுமசையாது." விதையைப் புதைத்துத் தண்ணீர்விடுவது நம்தொழில். அதன் வளர்ச்சியின் பொறுப்பு நம்முடையதா? அவ்விதை வெடித்துச் செடியாக வெளிக்கிளம்பும் ஆற்றலை அதற்கு அருளியுள்ளான் இறைவன். நல்ல செடியின் விதையைப் புதைத்தால் நல்ல பலனை அனுபவிக்கலாம். நல்ல எண்ணங்களை மனதில் புதைத்தால் வாழ்வின் விளைவு நல்லவண்ணமாக அமையும். தில்லையுட்கூத்தன் இன்னருளை நினைப்பதைவிட வேறு நல்ல எண்ணமுண்டா? எந்நிலையிலும் அவனுடைய அபயகரமுள்ளது எனும் உறுதியில் மனம் ஒன்றியிருந்து அதன் வழி பிறக்கும் நினைவுகளால் வாழ்க்கை நடத்தப்படுமாயின் "உந்தமக்கு ஊனமில்லை" என்று அவர் கூறும் உறுதிமொழியில் ஐயமுண்டா? "Seek ye first the kingdom of god" says Jesus.

தீய எண்ணங்களினால்தான் தீராப்பிணிகள் உடலில் தோன்றுகிறதென்று மனோதத்துவ ஆராய்ச்சியாளர்கள் இப்போது வெளியிடுகின்றனர். ஆயிரம் வருஷங்களுக்கு முன் அப்பர் சுவாமிகள் நினைவின் உயர்ச்சி, ஊனமில் வாழ்க்கைக்கு முக்கியமாக இருத்தல் வேண்டுமென்ற உண்மையை இப் பொன்மொழிகளால் போதித்துள்ளார். "உலகம் என்பது உயர்ந்தோர்மாட்டே" எதில் உயர்ந்தவர்கள்? நினைவில் உயர்ந்தவர்களேயாம். அப்படி உயர்ந்தோராய்க் கருதப்படுபவர் அப்பர்சுவாமிகள்.

குறிப்பு : அவருடைய திருநக்ஷத்திரம் "சித்திரை மாதம் சதய நக்ஷத்திரம்" ஆகும். அந்நாள் (12–5–58) சைவ மக்களுக்கு ஒரு சிறந்த நாள். அவருடைய விழா ஒவ்வொரு சைவர் வீட்டிலும், சைவ சமய சங்கங்களிலும், நன்னெறிக்கழகங்களிலும் சிவாலயங்களிலும் கொண்டாடப் படவேண்டும்.

காமாட்சி திருமணம்*

உலகங்கண்ட அறிவினுயர்ந்தோர் உலகங்கொண்டே இவ்வுலகத்தைப் படைத்துக் காத்து ஒடுக்கும் கடவுள் ஒருவர் உண்டென்று நிச்சயிக்கின்றனர். அக்கடவுள், உண்மை அறிவு இன்பம் ஆம் வடிவுடையார். அவர் எங்கும் இருப்பவர் ; எக்காலத்தும் இருப்பவர் ; எல்லாஞ் செயவல்லவர் ; எல்லாம் அறிபவர். பலவான் சத்திமான் என்று உலகிற் பேசப்படுவதை நிகர்த்துக் கடவுளும் சத்திமான் எனப்படுவர். கடவுள் ஒருவரே சத்திமான் சத்தி என இருகூருயினர். "பெண்ணாகிய பெருமான்" என்ருர் ஞானசம்பந்தர். "பெண்ணுகி ஆணுய்" என்ருர் மாணிக்கவாசகர். இன்பங் குறைந்த - நிறைந்த துன்ப முடைய உயிர்களாகிய நாம் ஆண் பெண் ஆம் இரண்டுருவம் எடுத்திருத்தலால் நம்மைக் காக்க, அவரும் ஆண் பெண் ஆம் உருவம் இரண்டு கொண்டனர். போகத்தையும் மோக்ஷத்தையும் உயிர்கட்குத் தருபவர் அவர். கோர வடிவங்கொண்டு உயிர்களின் வினையைப் போக்குவர் ; யோக வடிவங்கொண்டு யோக ஞானங்களைத் தருவர். அவர் போக வடிவங்கொண்டு போகத்தை யூட்டுவர். உயிர்களாகிய நாம் போகம் அனுபவித்தற்காக அவர் போகி ஆகின்றனர்.

"தொண்டனேன் புணருமா புணரே"

"தொண்டனேன் விரும்புமா விரும்பே"

"தொண்டனேன் நினையுமா நினையே"

என்பவை திருவிசைப்பா.

---

*இது தைப்பூசத்தன்று பரிபூரணம் எய்திய ஸ்ரீலஸ்ரீ சிவசண்முகமெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் திரிசிராப்பள்ளியில் நடைபெற்ற திருவளர் செல்வி - ர. காமாட்சியம்மையார் திருமணத்தில் வழங்குவதற்கெனத் தமது திருக்கரத்தால் எழுதி அச்சிடுவித்த கட்டுரை. சுவாமிகள் கடைசியாக எழுதிய கட்டுரை இஃதேயாகும்.

" போகியா யிருந்துயிர்க்குப் போகத்தைப்
புரித லோரார் "

என்பது சித்தியார்.

" ஒருமுகம்,
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே "

என்பது திருமுருகாற்றுப்படை. " காமநுகர்ச்சியில்லாத இறைவன் இங்ஙனம் நகையமர்ந்தான். உலகில் இல் வாழ்க்கை நடத்தற்கென் றுணர்க " என்பது மேற்கண்ட திருமுருகாற்றுப்படை யடிக்கு நச்சினார்க்கினியர் கூறிய விசேடவுரை.

" ஒருகை, நீணிற விசும்பின் மலிதுளி பொழிய,
ஒருகை, வானர மகளிர்க்கு வதுவை சூட்ட "

என்பது திருமுருகாற்றுப்படை.

மேற்கூறிய அடிகளின் நச்சினார்க்கினியர்விசேடவுரை: " என்றது, வள்ளியொடு நகையமர்ந்த முகம் உலகிற்கு இல் வாழ்க்கை நிகழ்த்துவித்ததாகலின் அவ்வில் வாழ்க்கை நிகழ்த்துதற்கு மழையைப் பெய்வித்தது ஒருகை, ஒருகை இல்வாழ்க்கை நிகழ்த்தற் பொருட்டு மணமாலையைச் சூட்டிற்று என்றவாறு " ஆம்.

உயிர்களாகிய நாம் திருமணஞ்செய்து சுத்தபோகத் தைத் துய்த்துப் போகத்தின் தன்மை இத்தன்மைத் தென்று உணர்ந்து, மும்மலத்தினின்றும் நீங்கி முழு இன்பத்தையும் பெறுதற்காகவே கடவுளும் ஆணும் பெண்ணுமாகி மணஞ் செய்து கொண்டனன்.

" வியனுலகம் வாழச்
செவ்வண்ணப் பெருமானார் மணவினையிற்
றிருவுள்ளம் பற்றினால் "

" மண்டா ணவத்தின் தருக்கிரித்து
மாறா இன்பப் பெருவாழ்வு
கண்டார் கதுவ அருள்கொழிக்குங்
கவுரி மணத்தின் திறம்புகல்வாம் "

என்பன காஞ்சிப் புராணம். காமாட்சியம்மையார் தழுவக் குழைந்த படலத்திலும் திருமணப்படலத்து முள்ளவை. எனவே, கடவுள் மணஞ்செய்துகொண்டு நம்மை மணஞ் செய்விக்கின்றார் என்பது பெறப்படும்.

நம் நிமித்தம் ஸ்ரீ ஏகாம்பரநாதனார் செய்துகொண்ட

காமாட்சி திருமணம்

உலகெலாம் உய்தற்காக மந்தரமலையில் பெருமான் எழுந்தருளிய காலத்தில் விளையாட்டாகப் பின்புறம் வந்து பெருமாட்டி, பெருமான் கண்களைப் புதைத்தாள்; உலகங்கள் இருண்டன; கலவியின்பந் தொலைந்தன; நூற்கேள்வி மயங்கின; அறிவின் தேர்ச்சி மறந்தன; கடவுட் பூசை துறந்தன உலகமெல்லாம். பலர் வேண்ட அம்மை கரங்களை விட்டாள். விழி திறந்தார் ஐயர். அம்மையை நோக்கி " எமது விழியை நீ புதைத்ததால் கடவுட் பூசை முதலிய நல்லவை நிகழவில்லை. அதனால் தீமை நின்னை உற்றது. நீ பிராயச்சித்தம் செய்துகொளல் வேண்டும். எமை யருச்சித்தல், எமை நினைத்தல், எமைத் துதித்தல், எம்பேர் செப்பல், எம்அடியரை வழிபடல் இவைகளே எவ்விதத் தீமையினையும் நீக்கும் பிராயச் சித்தங்கள். ஆதலின் சால நமக்கினிய காஞ்சிபுரஞ் சென்று நம்மைப் பூசித்தல் முதலியன செய் " என்று ஏவ, அம்மையும் தாதிகளோடு காஞ்சியையடைந்தனள். உமாபத்திரம் என்னும் தீர்த்தம் அடைந்து முழுகித் திருநீறணிந்து, உருத்திராக்ஷம் பூண்டு, பஞ்சாக்ஷரம் சொல்லி இறைவனையடைந்து தரிசித்தாள்; பூசித்தாள்; முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்தாள். இங்ஙனம் நிகழும் நாள்களுளொருநாள் எப்போதும் போலக் கம்பையாற்றின் நடுவில் பூசிப்பாள். ஒரு திருவிளையாடலைச் செய்ய இறைவர் எண்ணினார். உலகிலுள்ள எல்லாத் தீர்த்தங்களும் அக்கம்பையில் வர எண்ணினார். வந்தது வெள்ளம். மலையிற் படும் வளங்கள் முதலியவற்றை

வாரிவரும் வெள்ளங் கண்டு அம்மை பயந்தாள். "விடையவன் பூஜை மத்தியில் வந்ததே. எம்பிரான்மிசை நண்ணுமே. இனிச்செய்வதென்" என அன்பால் எண்ணி; ஒரு கொடியிலுள்ள இரண்டு கொழுந்துகள் ஒரு மலைச் சிகரத்தை இருபுறமும் தழுவினாற்போன்று பூசாவேதியில் தன் வல முழுந்தாளை ஊன்றி இருகையாலும் ஏகாம்பர நாதராம் தன் கணவரைத் தழுவிக் கொண்டாள் காமாட்சி அம்மை. தழுவவே பெருமான் திருவுருக் குழைந்தது. வளைத் தழும்பினோடு முலைச் சுவடு அணிந்தார் ஐயர். உலகமெலாங் களித்தன. அம்மை பூசித்த இலிங்க வடிவத்தினின்று இறைவன் உருக்கொடு தோன்றி அம்மையைக் கண்டு "மகிழ்ந்தனம்" என்றார். இறுகக் கட்டிய இரண்டு கைகளையும் விட்டுக் குவித்துக் கும்பிட்டுத் தோத்திரித்தாள். இறைவன், "காளீ" (கரிய நிறமுடையவளே) என அழைத்து, "வேண்டியது கேள்" என்றனன். இக் காஞ்சி வசிப்போர் நாற்பயனும் பெறவேண்டும் எனக் கேட்டனள். அங்ஙனமே இறைவன் அருளி, "இன்னும் வேண்டியதைக் கேள்" என்றனன்.

அப்பொழுது அம்மையார் "காளீ என்றழைத்தருளினீர் முன்னே மந்தர மலையில். அங்ஙனமே இப்பொழுதும் அழைத்தீர். காளி (கருநிறமுடையவள். காளம்-கருமை) எனும் பெயர் நீங்கக் கவுரி (கவுரம் - பொன்; கவுரி - பொன்னிற முடையவள்) என அடியேன் பெயர் பெற அருளல் வேண்டும்" என்றனள். அங்ஙனமே இறை அருளினன். கருநிறம் நீங்கிப் பொன்னிறம் பெற்றாள். காளி என்பது போய் கவுரி என்றழைக்கப்பட்டாள் காமாட்சி. இறைவர் "முன்பே குறு முனிவன் வேண்டினான். நாமும் வரந் தந்துளேம். இக் காஞ்சியில் 'பங்குனிமாத உத்திர நக்ஷத்திரத்தில், கவுரியாகிய காமாட்சியே! நின்னை மணப்பேம்" என்று சொல்லித் திருமணத்தில் திருவுளம் பற்றினார். மாயோனை அழைத்தனர். "காமாட்சிக்கும் எனக்கும் மணவிழாச் செய்க" எனக் கட்டளை யிட்டனர். மகிழ்ந்து அங்ஙனமே செய்ய முற்படுவார் மாயவனார். 'கவுரி திருமணம் காமாட்சி திருமணம்' என மணமுரசு அறையச் செய்தனர். அறையக்கேட்டு அகமகிழ்ந்தார் கேட்டார் எல்லாம். ஏகாம்பர நாதர் திருவருள் பெற்றுத்

திருவிழா நடத்தி ஒன்பது நாள் ஆன பின்னர் பத்தாம் நாள் ஆம் பங்குனி உத்தரத்தன்று காமாட்சி கலியாணம் நடத்து வாராயினர் மாயவனார். பெருமான், மணக்கோலம்கொண் டனர். அட்ட மங்கலங்களும் அணுக அண்ணலார் கலியாண மண்டபம் வந்தனர். ஆதி இலக்குமியும் தனது கணவனார் கருத்தின்படி காமாட்சியை அலங்கரித்தாள். மேம்பட் டார்க்குத் தேவமங்கையர் சோபனம் பாடினர். அம்மை ஆதிஇலக்குமிதேவியின் கையைப் பிடித்து, எழுந்து, பூமழை பொழிய, வானவர் மங்கல வாழ்த்தொலி மல்க, குடை நிழற்றக், கொடி, கவரி, சாந்தாற்றி யாதியவற்றை மகளிர் ஏந்தப் பரவிய ஆடைமேல் மெல்ல மெல்ல நடந்து, மண மண்டபத்திடை வந்து ஓவியக்கொழுந்தென உம்பர் நாதன் பாங்கரில் அமர்ந்தனள். திருமகளாம் ஆதிலட்சுமி தீம்பால் வார்ப்ப, அரங்கசாமியாம் திருமால் குமாரசாமியாம் ஏகாம்பரநாதன் மலரடி விளக்கி மதுப்பருக்கம் ஊட்டி மணமகன் கையில் காமாட்சி கையை வைத்து நீர் பெய்தளித்தான். ஆர்த்தன அளவிலா இயங்கள். பூமழை பொழிந்தது. பிரமன் நூன்முறை செங்கனல் வளர்ப்ப மணமகன் காமாட்சி மிடற்றில் மங்கல நாணினை வயங்கச் சாத்தினன். "திருமணத் திறங் கண்டவர் யாவரும் செழுந் தேன் பருகு வண்டென ஆநந்த வெள்ளத்திற் படிந்தார்.", மங்கலம் பாடினர்.

மணமகன் - ஏகாம்பரநாதன். ஏகம் = ஒன்று. ஆம் பரம் = ஒட்டு மாமரம், நாதன் = தலைவன். (வேதமாகிய ஒற்றை மாமரத்தடியிலுள்ள நாதன்.)

காமாட்சி : காம + அட்சி = காமாட்சி. காமம் = நினைத்தவற்றையெல்லாம் தரும், அட்சி - கண்ணையுடைய வள். அட்சம் = கண்.

காமாட்சி : கா + மா + அட்சி. கா - சரசுவதி, மா - இலட்சுமி, அட்சி = கண்ணாக உடையவள். சரசுவதியை யும் இலட்சுமியையும் கண்ணாக உடையவள். எனவே கல்வியினையும் செல்வத்தினையும் தம் அடியார்க்குக் கண் ணுற்றருள்பவள் என்பது கருத்தாம்.

காமாட்சி : க + அ + ம + அட்சி. க + அ = கா, கா + ம = காம. காம + அட்சி = காமாட்சி. க - பிரமனையும், அ -

விஷ்ணுவினையும், ம - உருத்திரனையும், ஆட்சி = கண்ணால் படைப்பவள்.

சுவர்ணாங்கீம் ரத்நபூஷாட்யாம்
சுகஹஸ்தாம் சசிஸ்மிதாம் |
காஞ்சீ நிவாசினீம் வந்தே காமாட்சீம்
காம தார்த்ததாம் || .

பொன்னிற உறுப்புடையவளும், ரத்நாபரணமுடையவளும், கிளி தங்கிய கையுடையவளும், புன்சிரிப்புடையவளும், காஞ்சீபுரத்தில் வசிப்பவளும், வேண்டினவர்க்கு வேண்டியவற்றைத் தருபவளும் ஆகிய காமாட்சியை வணங்குகிறேன்.

ஞானியார் நினைவுமலர் : கட்டுரை–13

தாயுமானர்*

1

உலகத்தில் மக்களாய்ப் பிறந்த நாம் இப்போதிருக்கின்ற நிலையைக் காட்டிலும் உயர்ந்த நிலையை அடைய இச்சை உடையவரா யிருத்தல் இயல்பு. யாரும் தற்போதிய நிலையிலேயே இருக்கவோ அல்லது அதனினும் தாழ்ந்த நிலைக்குப் போகவோ ஆசைப்பட மாட்டார்கள் என்பது திண்ணம். உயரிய நிலையை அடைய இரண்டு வழிகளுண்டு. புத்தி ஒன்று; இறைவனுடைய அருள் விசேடம் மற்றொன்று. இரண்டுக்கும் பொதுவாக ஞானம் என்ற ஒரு பெயர் இருப்பினும், புத்தியால் வரும் ஞானம் சாதாரண ஞானமும், இறைவன் அருள் விசேடத்தால் வரும் ஞானம் சிறப்பான ஞானமுமாம்.

*இது ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் சென்னை, இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் ஆண்டுவிழாவில் (1937) நிகழ்த்திய சொற்பொழிவு. திரு. கச்சி. முனிசாமி உடையார், பி.ஏ., அவர்கள் கைக் குறிப்பு.

மனித உடம்பு தொண்ணூற்ருறு கருவிகளால் அமைக்கப்பட்டுள்ளது. அவைகளில் ஒன்று புத்தி. அஃது அந்தக்கரணங்கள் நான்கி லொன்ருகும். மாயை சம்பந்தமான உடல் அறிவில்லாதது. உடம்பிலுள்ள புத்தியும் அறிவில்லாததே. அறிவில்லாத புத்தியால் ஞானம் உண்டாகுமா என்ற ஐயம் தோன்றுவது இயற்கை. அறிவில்லாத கண்ணுடியானது தனக்கு எதிர்ப்பட்ட பொருளைத் திருப்பிக் காட்டுவதுபோல் புத்தியாகிய கண்ணுடி தன் முன் உயிரின் அறிவு எதிர்ப்பட்டபோது அவ்வறிவைத் திருப்பிக் காட்டுவது புத்தியின் தத்துவமாகும். அப்படி புத்தி திருப்பிக் காட்டுகின்ற ஞானம் எட்டு வகைப்படும். அவை பின் வருமாறு :—

1. பூர்வ ஜன்ம வாசனையால் யுக்திக்குப் பொருத்தமாக ஆராய்ந்து அறிகிற ஞானம்.

2. ஊழ்வலியால் உண்டாகும் துன்பங்களை அனுபவித்த காரணமாக உண்டாகும் ஞானம். இது ஆதி தெய்விகம் எனப்படும்.

3. உலகத்தில் மற்ற உயிர்களால் உண்டாகும் துன்பத்தை அனுபவித்த காரணமாக வரும் ஞானம். இது ஆதியாத்மிகம் எனப்படும்.

4. பஞ்ச பூதங்களால் ஏற்படும் துன்பத்தை அனுபவித்த காரணமாக உண்டாகும் ஞானம். இது ஆதி பௌதிகம் எனப்படும்.

5. கற்க வேண்டிய நூல்களைக் கற்ற அறிவால் வரும் ஞானம்.

6. குருவால் வரும் ஞானம்.

7. நல்ல கருமங்கள் செய்வதால் உண்டாகும் ஞானம்.

8. உலகத்தில் சில பெரியார்கள் உணர்ந்து அனுபவித்துத் தம்மை மறந்தோ உயிர்கள் பேரில் வைத்த கருணையினுலோ சொல்லிய வாக்கைக்கேட்டலால் வரும் ஞானம்.

இவைகளில் ஒன்று, ஏழு, எட்டு முக்கியமெனினும், எட்டாவதாகக் கூறப்பட்ட பெரியோர் வாக்கு ஞானயடை

வதற்கு மிகவும் சிறப்பான சாதனமாகும். பெரியோர் சொல்வதை நேரில் கேட்பதோ, அஃதியலாதெனின் நேரில் கேட்டவர்கள் மூலமாக அறிவதோ, அஃது மியலாதெனின் பெரியோர் இயற்றிய நூல்களை உள்ளன்புடன் கற்று அறிவதோ நமக்கு இன்றியமையாத தொன்றாகும். எனவே, தாயுமானாருடைய வாக்கை நாம் நேரில் கேட்பதற்கும், அல்லது நேரில் கேட்டவர்கள் மூலமாகக் கேட்பதற்கும், நாம் புண்ணியம் செய்யவில்லை யாகையால் அவர் இயற்றிய நூல்களை ஆராய்ந்தறிந்து அவர் சொன்ன உறுதிமொழிகளைக் கடைப்பிடித்து அதன்வழி ஒழுகி நாம் ஞானம் அடையவேண்டியது இன்றியமையாததாகலின், நாம் அவரைப்பற்றி விசாரிக்க வேண்டியதற்கு இது முதற் காரணமாகும்.

தாயுமானாரைப்பற்றி நாம் விசாரிக்க ,வேண்டியது அவசியம் என்பதற்கு மற்றொரு காரணமும் உண்டு. நாலடியார் என்னும் சிறந்த நூல். பெரியாருடன் பேசல், நல்ல நூல் வாசித்தல், அறஞ்செய்தல் ஆகிய இம்மூன்றையும் வற்புறுத்துகின்றது. திருமூலரும்,

" அறிவார் அமரர் தலைவனை நாடிச்
செறிவார் பெறுவர் சிலர்தத் துவத்தை
நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியாருடன் கூடல் பேரின்ப மாமே "

என்றார். பெரியாருடன் கூடல் நமது நாட்டு ஒழுக்கமாகும். சம்பந்தர் தன்னுடைய ஊருக் கருகாமையில் போகின்றார் என்று கேள்வியுற்ற சிறுத்தொண்டர் ஓடிச் சம்பந்தருடைய திருவடிகளில் வீழ்ந்து தன்னுடைய திருப்பதிக்கு அழைத்துச் சென்றார் என்பதைச் சேக்கிழார்,

" அருகணையுந் திருப்பதிக ளானவெலாம்
அங்கணரைப் பணிந்து போற்றிப்
பெருகியஞா னம்பெற்ற பிள்ளையார்
எழுந்தருளும் பெருமை கேட்டுத்

திருமருவு செங்காட்டங் குடிநின்று
சிறுத்தொண்ட ரோடிச் சென்றங்
குருகுமனங் களிசிறப்ப வெதிர்கொண்டு
தம்பதியுட் கொண்டு புக்கார் ”

என்று கூறுகிருர்.

பொல்லாங்கு புரிந்தொழுகிய பல்லவனும் திருநாவுக்கரசரின் மகிமையையும் சைவத்தின் பெருமையையும் உணர்ந்து அவர் திருவடிகளில் வீழ்ந்து அவரை அடைந்த போது சுவாமிகளும் அரசனை ஏற்றுக்கொண்டார். அவன் முன் தமக்கு இயற்றிய கொடுஞ்செயல்களை நினைந்தாரில்லை. இஃது சான்ருேருடைய உத்தம குணமாகும்.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

இணரெரி தோய்வன்ன வின்ன செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

என்பன தமிழ்மறை வாக்கல்லவா? எனவே, பெரியாருடன் கூடுதல் நம்நாட்டு ஒழுக்கமாகும். ஆதலால் நாமும் தாயுமானுரை அவர் இயற்றிய நூல் மூலமாக அடைந்தும் அவர் சரித்திரத்தைக் கேட்டும் புத்திஞானத்தைப் பெற்றுத் துன்பத்தை ஒழித்து இன்பத்தை அடைவதற்காக நாம் அவரைப் பற்றி விசாரிக்கவேண்டுமென்பது இரண்டாவது காரணமாகும்.

தாயுமான சுவாமிகள் வேதாரண்யத்தில் கேடிலியப்பப் பிள்ளைக்கு இரண்டாவது மகனுகத் தோன்றிக் கல்வி அறிவு முதலியவைகளில் சிறந்து அந்நாட்டு அரசனிடம் அமைச்சுத் தொழில் பூண்டு விளங்கிவந்தார். அமைச்சராக இருக்குங் காலத்திலேயே தம் அறிவை உலகப் பொருள்களில் செலுத்தாது, அஃது அழியக்கூடியது நிலைத்த இன்பம் தரத்தக்கதன்று என்பவற்றை அறிந்து உயிரைப் பற்றியும் விசாரிக்க ஆரம்பித்துப் பல நூல்களைக் கற்ருர்.

கற்குந்தோறும் அவருக்குச் சந்தேகங்கள் அதிகமானதே தவிர உண்மை விளலகவில்லை.

" அறிதோ றறியாமை கண்டற்றால் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு "

என்றபடி நூல்களை நுணுக்கமாக ஆராய்ந்து அறியுந் தோறும் முன்னிருந்த தமது அறியாமையையே கண்டார். அறியாமையைப் போக்கிக்கொள்ள மிகுந்த வேட்கையுடையவராய், பசி வந்த வண்டுபோல் ஓர் ஆசிரியனைத் தேடிச் சென்றார். ஊழ்வினைப் பயனாகத் திருமூலர் மரபில் வந்த மௌனகுரு ஒருவர் தாயுமான சுவாமிகளின் வேட்கையைத் தணிவிப்பதற்காக அவரை எதிர்நோக்கி வந்து திரிசிராப்பள்ளியில் சந்தித்தபோது சுவாமிகள் அனல் முன் பட்ட நெய்போல் உருகினார். சுவாமிகளின் பக்குவ நிலையை அறிந்து மௌனகுரு உபதேசம் செய்தருளினார்.

" எட்டுதற்கரிய சற்குரு அருளால் இயம்புமோர்
மொழியினைப் பெற்றே
நிட்டை சாதித்தே சகல கேவலங்கள் நீங்கிடில்
பிறப்பிறப் பறும் "

என்றபடி மௌனகுரு உபதேசத்தின் பயனாகத் தாயுமானார் நிஷ்டையிலிருந்தார். எனினும் பழவினை வாசனையால் சிற்சில சமயங்களில் நிட்டை கலைந்து சுவாமிகள் பகிர்முகப் படுவதுண்டு. அப்படி பகிர்முகப்பட்ட காலங்களில் உலகப் பொருள்களில் ஈடுபடாமல் பல பாடல்கள் பாடினார். அவைதாம் நமக்கு இப்போது கிடைத்திருக்கிற பாடல்களாகும். சுவாமிகள் கடைசியில் இராமநாதபுரம் சென்றிருந்தபோது அவ்வூரில் பல காலங்கள் மழையின்மையால் குடிகள் வருந்தியிருப்பதை உணர்ந்து சுவாமிகள் மழைபெய்விப் பாரா என்று அவ்வூர் அரசன் விசாரித்தான். இதை அறிந்த தாயுமானார் ஒரு வெண்பா பாடி மழை பெய்வித்தார். அப்படியாக நிட்டையிலிருந்தும் கடவுளைத் துதித்தும் சுவாமிகள் இலட்சிமிபுரம் என்ற ஊரில் முடிவில் நிரதிசயானந்த சுகத்தைப் பெற்றார்.

" கலித்தொகையில் சைவம் "

வித்துவான் - சி. துரைசாமி,

தலைவர், ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ்க் கல்லூரி, மயிலம்

கடவுள், ஆன்மா, உலகம் ஆகிய முப்பொருள் உண்மைகளை உணர்த்துவதற்கென்றே தோன்றிய நூல்கள் சாத்திரங்கள் என்ற பெயரோடு இடைக்காலத்தில் தோன்றின. ஆயினும் பண்டைக் காலந்தொட்டே நம் பழந் தமிழ்ப் புலவர்கள் முப்பொருளின் தன்மையை நன்குணர்ந்து அவைகளைப் பண்டைய இலக்கிய இலக்கணங்களிலே இடையிடையே புகுத்தித் தமிழ் மக்களெல்லாம் கற்று இறைவழிபாட்டினின்றும் நீங்காது வாழ வழி செய்தனர் என்பது கற்றறிந்தோர் ஆராய்ந்தறிந்த உண்மை.

மிகப் பழைமை வாய்ந்த ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்தும் ஏனைய சங்க நூல்களிலும் இவ்வுண்மைப் பொருள்களை ஆங்காங்கே காணலாம். அத்தகைய சங்க நூல்களில் ஒன்றாய கற்றறிந்தார் ஏத்துங் கலியுள் கடவுள் வாழ்த்திலும் ஏனைய இடங்களிலும் காணப்படும் இறைவனது தன்மையை எடுத்துக் காட்டுவாம்.

ஐந்திணையுள் ஒவ்வொரு நிலத்திற்கும் ஒவ்வொரு தெய்வத்தைப் பற்றிக் கூறி எல்லா நிலத்திற்கும் பொதுவாக இறைவன் ஒருவன் உண்டென்பதைத் தொல்காப்பியர் தம் நூலில் 'இலே மறை காயென' உணர்த்தியதை உட்கொண்ட கலித்தொகை ஆசிரியர்கள் (ஐவரோ-பலரோ) பல புராண இதிகாச வரலாறுகள் ஏனைத் தெய்வங்களின் தன்மைகள் ஆகியவற்றைப் பற்றிக் கூறினரேனும், அப்பொதுவான சிவம் என்று சொல்லப்படுகின்ற இறைவனது தன்மையைக் கூறும் முறைமையை எண்ணும்போது சைவ சமய நூலோடு ஒத்துக் காண்பதற்குரிய பல செய்திகள் காணப்படுதலை அறியலாம். அவற்றுள் சில :—

" ஆறறி அந்தணர்க்கு அருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து திரிபுரம் தீமடுத்துக்

கூறாமல் குறித்ததன்மேல் செல்லும் கடுங்கூளி
மாறாப்போர் மணிமிடற்று எண்கையாய் கேளினி !

படுபறை பலஇயம்பப் பல்உருவம் பெயர்த்துநீ
கொடுகொட்டி ஆடுங்கால் கோடுயர் அகல்அல்குல்
கொடிபுரை நுசுப்பினாள் கொண்டசீர் தருவாளோ

மண்டுஅமர் பலகடந்து மதுகையால் நீறணிந்து
பண்டரங்கம் ஆடுங்கால் பணைஎழில் அணைமென்தோள்
வண்டரற்றும் கூந்தலாள் வளர்தூக்குத் தருவாளோ

கொலைஉழுவைத் தோலசைஇக் கொன்றைத்தார் சுவற்புரளத்
தலைஅங்கை கொண்டுநீ காபாலம் ஆடுங்கால்
முலைஅணிந்த முறுவலாள் முற்பாணி தருவாளோ

என ஆங்குப்

பாணியும் தூக்கும் சீரும் என்றிவை
மாணிழை அரிவை காப்ப
ஆணம் இல்பொருள் எமக்கு அமர்ந்தனை ஆடி ”

(1 - கடவுள் வாழ்த்து)

இச் செய்யுளில் இறைவனது தொழிலைப்பற்றி முதலில் கூறுகின்றார்.

‘வீட்டு நெறியை அறிய விரும்புகின்ற ஓராறி உயிர்க்கும் உறுகண் ஓம்புதலையே சிறந்த அறமாகக் கொண்ட அந்தணர்க்கு அரிய மறைத்துச் சொல்லப்படுகின்ற உபதேசப் பொருள் பலவற்றையும் பலவகையாகத் தெரிவித்துத் தெளிந்த நீராகிய கங்கையாளைச் சடையில் மறைத்து முப்புரத்தினை எரியினால் உண்ணச்செய்து வாக்கால் பேசப்படாமலும் மனத்தால் குறித்த பொருட்கு மேற்பட்டும் நிற்கும் வலிய கூளியினிடத்துப் பிறக்கிடாத போரினையும் நீலமணி போலும் திருமிடற்றையும் எட்டுக் கையினையும் உடைய பெருமானே ! இதனைக் கேட்பீராக !

“ நினது கையினின்று ஒலிக்கின்ற பறைகள் பலவும் ஒலிக்கின்றன. பலவகைப்பட்ட வடிவங்களையும் ஒடுக்கிக்

கொண்டு கொடிதாகிய கொட்டி யென்னும் கூத்தை நீ ஆடுங்கால் உமாதேவியோ சீரைத் தருவாள்?

"நெருங்கி எரியும் தீ மடுத்தல் போன்ற அரிய போரை வென்று போரில் வெந்து வீழ்ந்தவர்களது நீற்றைப் பூசிப் பாண்டரங்கம் என்னுங் கூத்தை நீ ஆடுங்கால் உமா தேவியோ தூக்கைத் தருவாள்?

"கொல்லுந் தன்மை வாய்ந்த புலியைக் கொன்று அதன் தோலை உடுத்துக் கொன்றைமாலை தோளில் அசைய அயன் தலையை அகங்கையிற் கொண்டு காபாலம் என்னுங் கூத்தை ஆடுங்கால் உமாதேவியோ பாணியைத் தருவாள்? ஏனெனில் ஆண்டெல்லாம் உன் கூத்தைக் காண உமாதேவி யின்றிப் பிறர் ஒருவருமில்லையே!

"என்று சொல்லும்படி நீ சங்கார காரணனாக இருந்து அழித்தற்றொழிலைச் செய்யுங்கால் பாணி தூக்கு சீர் என்ற இவைகளை உமாதேவி காண நீ ஆடிக் காத்தற்றொழிலைச் செய்யுங் காலத்தே அன்பு இல்லாத எம்பொருட்டு ஒருருவங் கொண்டு வந்து அருளினாய் இதற்குக் காரணம் என்னவோ" என்ற செய்திகளைத் திரட்டிக் கூறுகின்றார் ஆசிரியர்.

ஆன்மாக்கள் பலவென்பதும் அவை அனாதியே ஆணவ மலத்தால் கட்டுண்டு கிடக்கின்றன என்பதும் அவைகளின் மேலுள்ள அருளால் இறைவன் தனு கரண புவன போகங் களைத் தந்து வீடுபேற்றை விரும்பும் வண்ணம் செய்து முடிவில் வீடுபேற்றையும் தருவன் என்பதும் அவ்வாறு அருள் செய்வான் விரும்பிய இறைவன் ஆன்மாக்கள் பல வற்றையும் முடிவுக் காலத்தே தன்னிடத்தே ஒடுக்கியும் மீண்டுந் தானே தோற்றுவித்தும், நிலைபெற்ற காலத்தே காத்தும் அருள் செய்கிறான் என்பதும் சைவ சமய நூற் கொள்கை. முடிவைச் செய்கின்ற இறைவனே தோற்று வித்தலையும் செய்வான் என்பது,

"அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதாம்
அந்த மாதி யென்மனார் புலவர்"

என்னும் சிவஞான போத முதற் சூத்திரக் கருத்து.

"தொல் ஊழி தடுமாறித் தொகல் வேண்டும் பருவத்தால் பல்வயின் உயிரெல்லாம் படைத்தான்கண் பெயர்ப்பான் போல்" (நெய்தற்கலி–12) என்னும் கலித்தொகை அடியினுள் அமைத்திருக்கும் புலவர் கருத்தினைப் போற்றி யுணர வேண்டுமன்றோ ?

திரிபுரத்தை அழிப்பதற்காக இறையவன் இமயத்தை வில்லாக வளைத்தான் என்னும் பழைய இலக்கிய உண்மையை "இமயவில் வாங்கிய ஈர்ஞ்சடை யந்தணன்" (குறிஞ்சி–2) என்ற அடிகளில் குறிப்பிடுகின்றார்.

இறையவன் ஆதிரைநாளை யுடையவன் என்பதை உணர்த்தவேண்டும் என்று கருத்துடையவர் 'தலைவியைப் பிரிந்த காலத்து, தலைவன் பொய்க்கமாட்டான், குறித்த காலத்தே வருவான் என்று ஆற்றுவிக்க, தோழியானவள் சண்பகம் குறித்த காலத்தே பூத்தலைத் தவறாதது போலத் தலைவனும் கூறிய பருவத்தே தவறாது வருவான் என்று சொல்லுகிறாள். அதோடு இருப்பின் இங்கு எடுத்துக்காட்ட வாராதன்றோ ? 'சண்பகம் ஆதிரை நாளையுடையான் வண்ணம்போல மலர்ந்தது' என்று குறிப்பிடும், முகத்தால் இறைவன் ஆதிரை நாளையுடையான் என்ற செய்தியை உணர்த்துகிறார்.

உடுக்கள் இருபத்தேழில் இரண்டு மட்டும் திரு என்னும் அடைமொழியோடு வழங்கப்படும். அவற்றுள் ஒன்று திருவாதிரை, மற்றொன்று திருவோணம். எனவே முன்னது இறைவனுக்குரிய நாள், பின்னது திருமாலுக்குரிய நாள் என்ற செய்தியும் அறிதற்குரியன.

அல்லாமலும் மூன்று கண்கள் உடையவன், கணிச்சிப் படையுடையவன், அடியவராகிய மார்க்கண்டேயர் பொருட்டுக் காலனை யுதைத்ததனால் காலகாலன் என்னும் பெயருடையவன், உடம்பில் இடது கூறு உமாதேவியை உடையவன், அடைக்கலமாக வந்த பிறையை அணிந்து அருள் செய்தவன் என்பன போன்ற பல செய்திகளையும் கலித்தொகையில் பல இடங்களில் காணலாம்.

இதுபோன்ற பலவகையான சைவ சமயக் கருத்துக்கள் கலித்தொகையில் உள்ளதை அறிந்து பயன் பெறுவோமாக.

——

ஆலய அமைப்பு

கோவை கிழார்

முன்னுரை : தமிழ் மக்கள் பண்டைக்காலம் முதற் கொண்டு தம் அறிவாற்றல்களால் உண்டாக்கிப் போற்றி வந்திருக்கும் செல்வங்களில் ஆலய அமைப்பு ஒன்ருகும். அது ஒப்பற்றிருப்பது மன்றி நமது பண்டையருடைய அருமை பெருமைகளையும் கலைச் சிறப்புகளையும் உலகெங்கும் தோற்றுவித்துப் பெருமைகொளச் செய்வதுமாகும். நமது பண்பாட்டிலும் தமது பண்பாடு சிறந்ததென்று செருக்குடன் பிதற்றித்திரியும் வெள்ளையர்களும் தென்னாட்டிற்கு வந்து நமது செல்வங்களை ஒருமுறை பார்த்தவுடன் தமது செருக்குப் பேச்சுக்களை அடக்கிக்கொண்டு " அம்மா பெரிது என்றகமகிழ்வுறுவதை " நாம் கண்கூடாகக் காண்கிருேம். இங்ஙனம் ஒப்பற்ற பெருமையைத் தமிழர் பண்பாட்டிற்கு அளித்து வருகிற ஆலய அமைப்பானது, உலகிலேயே சிறந்த செல்வங்களில் ஒன்று என்ருல் அது மிகை ஆகாது. அதன் வரலாற்றையும் அதன் பெருக்கத்தையும், நூல் ஆதாரத்தையும் தத்துவ அடிப்படையையும் வெவ்வேருக விரித்துக் கூறி இங்கே சுருக்கமாக எழுதுவோம்.

வரலாறும் பெருக்கமும் : தென்ஞட்டின் சிற்பக்கலை, தொடர்ச்சி பெற்ற ஒரு வரலாற்ருேடு அமைந்துள்ளது. அது சமய வளர்ச்சியைப் பின்பற்றியே தொடர்ந்துள்ளது. பண்டைத் தமிழர் முதலில் இயற்கைப் பொருள்களை வணங்கி வந்தார்கள். கதிரவன், நிலா, நெருப்பு, காற்று, மழை, நிலம் இவைகளைப் போற்றினுர்கள். இளங்கோவடிகளும் முதலில் திங்கள், ஞாயிறு, மழை இவைகளைப் போற்றியிருத்தலை நாம் காண்கிருேம். பிறகு கண்ணில் காண முடியா அருவங்களைப் போற்றினுர்கள். அவ்வாறு போற்றினதில் அவைகளுக்காக உருவங்களைக் கற்பித்து அவைகளின் மூலமாக அருவங்களை வணங்கினுர்கள். மக்கள் தங்குவதற்கு நிழலும் கூறையும் கொள்ளுதலை ஒத்துத் தாம் வழிபடும் இறைவனை வெய்யிலிலிருந்தும் மழையிலிருந்தும் காப்பதன் பொருட்டு மேடையின்மீது முதலில் மர நிழலும் (அரசம்பலம், ஆலம்பொழில், வேம்படி ஆண்டவர்) பிறகு பந்தலும் அமைத்தார்கள். பந்தல் பிறகு கூறையாகவும் ஓரளவு இல்லமாகவும் பெருகிற்று. அக்காலத்தில் ஏற்பட்ட

இல்லம் மண் இல்லமாகவும் பிறகு செங்கல் இல்லமாகவும் வலிவுறுத்தப்பட்டது. (பரவையுண் மண்தளி போன்றவை) இவ்விதக் கோயில்களே வெகு நூற்றூண்டுகள் வரை கட்டப்பட்டன. உருவங்களோ பொதுவாக உருண்டைக் கற்களாகவே இருந்தன. அது எளிதில் ஆக்கக் கூடியது. அவைகளிலிருந்தே இலிங்கங்கள் தோன்றின எனலாம். தற்போதும் கிராமாந்தரங்களில் உருண்டைக் கற்களே தெய்வங்களாக இருப்பதைக் காணலாம். கொங்கு நாட்டில் திருமால் கோயில்களிலும்உருண்டைக் கற்களைமூலத்தானங்களில் காணலாம். (காரைமடை அரங்கநாதர் கோயில்).

இனி பல்லவர் ஆட்சி 3-ம் நூற்றூண்டு முதல் தமிழ் நாட்டில் தொடங்கியது. அம்மன்னவர்கள் கலை விற்பன்னர்கள். அவர்களில் சிலர் சமணர்களாகவும் இருந்தார்கள். வடநாட்டுக் கலைகளையும் பயின்றவர்கள். மண் தளிகள் வெகுகாலம் இருக்கக் கூடியவை அல்ல என்றறிந்து இறைவன் தளிகள் நிரந்தர நிலைபெறுவதே நலம் என்று கருதி அம்மன்னவர்கள் கருங்கல்லில் கோயில்களைச் சமைத்தார்கள். மலைப்பாறைகளில் குடைந்து மண்டபக் கோயில்களை உண்டாக்கினுர்கள். பிறகு தனிக் கற்களைத் தேர்கள் போல் ஆக்கிக் கோயில்கள் ஆக்கினுர்கள். பாறைகளில் உருவங்களைச் செதுக்கினுர்கள். பிறகு செதுக்கின கற்களை ஒன்றின்மேல் ஒன்று அடுக்கிக் கட்டுக்கோயில் ஆக்கினுர்கள். இந்த வகையில் மகேந்திரவர்மன் காலம் தொடங்கிக் கற்றளிகள் நாட்டில் ஏற்படத் தொடங்கின. தனிக் கற்கோயில்கள் ஒரே அளவு கொண்டவை. மண்டபக் கோயில்கள் தூண்களையும் பல சிற்றறைகளையும் கொண்டவை. கட்டுக் கோயில்கள் ஒன்றின் முன் நன்ருகக் கட்டின மண்டபங்களையும் மதில்களையும் கொண்டவை. தனிக் கற்கோயில் கருவறை சிகரம் இரண்டும் அடங்கிய விமான முறையாகும். மண்டபக்கோயில் பல சிற்றறைகளுடன் (ஒன்று அல்லது மூன்று) முன் மண்டபமும் கொண்டவை. கட்டுக்கோயில் ஒன்று, மூன்று, ஐந்து என்ற ஒற்றைப்படையில் கொண்ட மண்டபங்களை நீளமாகக் கொண்டவை. இம் மூவகைக் கோயில்களும் பல்லவ மன்னர்களால் உண்டாக்கப்பட்டவை. அதே காலத்தில் அவற்றைப் போன்ற அமைப்பு நடு இந்தியாவில் சளுக்கியர்

ஆட்சியில் கட்டப்பட்டது. இவை ஏற்பட்ட காலத்தில் சித்திரம் அல்லது ஓவியமும் பல மண்டபங்களில் தீட்டப் பட்டது. கோயில்களின் விமானங்களும் தேர் போலவும், சைத்திரியம் போலவும் சித்திரிக்கப்பட்டன; பிற்காலப் பல்லவர்கள் யானை முதுகு போன்ற சைத்திரியக் கோயில் களும் கட்டினார்கள். (உதாரணம்: திருத்தணி வீரட்டர் கோயில்). இவ்விதக் கோயில்கள் தொண்டைநாட்டில் மிகுதியாகக் கட்டப்பட்டுள்ளன.

பல்லவர்களுக்குப்பின் ஆட்சிபுரிந்த பேரரசர்கள் சோழர்கள். இவர்கள் மூலத்தானங்களை மிகப் பெரிதாகக் கட்டினார்கள். முதலில் கருங்கல்லாலும் பிறகு செங்கல்லி னாலும் அவைகளைக் கட்டினார்கள். (தஞ்சை ராஜ ராஜேச் சுரம், கங்கை கொண்ட சோழேச்சுரம்.) சுற்று மண்டபங் களும் கோபுரங்களும் அளவில் அவற்றிற்குச் சிறியவை களாக இருந்தன. மூலத்தான மூர்த்திகளும் மற்ற சுற்று உருவங்களும் பெரிதாக உண்டாக்கப்பட்டன. அப்போது கோயில் அமைப்பு மிகச் சிறந்து வளர்ந்தது. மதில்களும் கோட்டை மதில்கள்போல் உயர்வாகக் கட்டப்பட்டன. செப்புத் திருமேனிகளும் வெகு அழகாகச் செய்யப்பட் டன. தேவர்களுடைய உருவங்கள் மட்டுமேயன்றி அடி யார்களுடைய உருவங்களும் செய்து வைக்கப்பட்டன. அதுவரையில் மாறுபட்ட உருவங்கள் வணங்கப்படவில்லை. சோழ மன்னர் காலத்தில்தான் முதன் முதலாக நாயன் மார் ஆழ்வாராதிகள் திருவுருவங்கள் வணங்கப்பட்டன. கோயில் அமைப்பு ஒரு கலையாக ஓதப்பட்டுப் போற்றப் பட்டது. சோழ நாட்டிலிருந்து இக்கலை தெற்கே பாண்டி நாடு, ஈழநாடு சென்றது. திரைகடல் ஓடித் தமிழ்ப் பண் பாட்டைப் பரப்பச், சென்ற தமிழ் வீரர்களும் வாணிபர் களும் ஆலயக் கலையைச் சாவகம் (ஜாவா), ஸ்ரீ விஜயம் (சுமத்ரா), கடாரம் (மலேயா), கம்போடியா (இந்துசீனா) முதலிய நாடுகளுக்கும் கொண்டு சென்றார்கள். அந்நாடு களில் தற்போது காணும் இந்து ஆலயங்கள் குளமன்ன தோர் கோயில்களைக் கட்டப்பட்டன. இன்றைக்கும் வெள்ளையர்களும் மயங்கி வியக்கும்படியான பெருங் கோயில்கள் தீவுகள்தோறும் காணப்படுவதை அறியலாம். இவைகள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டவை.

சோழ பாண்டியர்கள் மெலிவு அடைய வடக்கே ஹொய்சளர்கள் சிறிது காலம் ஆலய அமைப்பைச் சிறப்பித்தார்கள். அவர்களுடைய வேலைப்பாடு கருநாடக சாம்ராச்சியத்தில் வெகுவாகக் காணலாம். தென்னாட்டில் சிலவே உண்டு. (திருச்சிக்கருகில் கண்ணனூர் போசலேசுவரர்). அவர்கள் ஆலயங்களில் சித்திர வேலைப்பாட்டை மிக நுணுக்கமாகச் செய்தார்கள். பின்னர் முகம்மதியச் சூறையாடல் வந்த அதற்குப்பின் விஜயநகர ஆட்சி தென்னாட்டில் சில நூற்றாண்டுகள் வரை இருந்து விளங்கியது. அவர்கள் மூலத்தானத்தைவிடச் சுற்றுப்புறக் கட்டிடங்களைப் பராமரித்தார்கள். முன் மண்டபங்கள், பெருங் கோபுரங்கள், பெரும் மதில்கள், தடாகங்கள், நந்தனவனங்கள் முதலியவைகளை வைத்துக் கோயில்களைச் சிறப்பித்தார்கள். 4 கால் முதல் 1008 கால் வரை மண்டபங்கள் தோன்றின. 3 நிலை முதல் 11 நிலை மாடங்கள் வரை கொண்ட கோபுரங்கள் கட்டப்பட்டன. அழகான படிகள் கொண்ட தெப்பக்குளங்கள் தோண்டப்பட்டன. தூண்களில் பலவித விசித்திரங்களும் விட்டங்களிலும் தளங்களிலும் கற்சங்கிலிகளும் கல் மலர்களும், உத்தரங்களில் கல் விலங்குகள் முதலியவைகளும் செதுக்கப்பட்டன.

விசய நகரத்துக்குப் பின் நாயக்க அரசர்கள் அச்சிற்பப் பணிகளையே தொடர்ந்து செய்தார்கள். இந்த வகையில் ஒரு மதில் கொண்ட கோயிலானது 3, 5, 7 மதில்களைக் கொண்ட பெருங் கோயில்கள் ஆயின. இந்த முறையில் ஆலய அமைப்பு 20 நூற்றாண்டுகளாக வளர்ச்சி பெற்று வந்திருக்கின்றது.

ஆகம அல்லது நூல் ஆதாரம்: தென்னாட்டில் உள்ள ஆலயங்களின் அமைப்பானது அவையவைகளின் சமயங்களைப் பொறுத்து வேறுபட்டிருக்கின்றது. பண்டைக் கோயில்கள் பெரும்பான்மையாக முப்பிரிவினவாக மூன்று சமயச் சின்னங்களாக இருக்கின்றன. அவைகள் முறையே சமணம், சைவம், வைணவம் என்பவைகள். பல்லவர் காலம் முதற்கொண்டே மிகச் சிறப்புற்ற தலைநகரான காஞ்சிபுரத்தில் இம் முவ்வித சமய நிலையங்களும் காணலாம். அவைகள் முறையே திருப்பருத்திக்குன்றம் என்ற ஜினகாஞ்சி, திருவகம்பம் என்ற பெரிய அல்லது சிவகாஞ்சி,

அத்திகிரி என்ற சின்ன அல்லது விஷ்ணு காஞ்சி என்பன வாகும். இம் மூன்று இடங்களையும் உற்று நோக்கி ஆராய்ந்தால் அவைகள் எவ்வெவ்வாறு வேறுபடுகின்றன என அறியலாம். இவைகளில் ஜைன அல்லது சமணக் கோயில்களுக்கும், சைவக் கோயில்களுக்கும் அமைப்பில் வேறுபாடு மிகுதியும் இல்லை. திருவுருவங்களில் மட்டும் வேறுபாடு இருக்கும். ஆனால் சைவக் கோயிலுக்கும் விஷ்ணு கோயிலுக்கும் வெகு வேறுபாடுகள் உண்டு. மூர்த்திகளில் மட்டும் அல்ல, இட அமைதிகளிலும் உண்டு. ஆனால் அடிப்படையான சிற்ப முறை இவைகளிலும் ஒன்றே என அறியவேண்டும். கருவறை, மண்டபங்கள், விமானக் கட்டு, பிராகாரங்கள், மதில்கள், கொடிமரம், உள் துறைத் தளிகள், கோபுரம் முதலிய பெருத்த பகுதிகள் எல்லாம் ஒரே அடிப்படை கொண்டிருக்கும். இவைகளுக்குக் காரணம் இவைகள் இரண்டும் பண்டைப் பெருமக்களால் வகுக்கப்பட்ட ஆகம முறைப்படி அமைந்திருப்பதே ஆகும்.

ஆகமங்கள் இரு பிரிவுகளைக் கொண்டிருக்கின்றன. அவை சைவம் வைணவம் என்பவை. சைவாகமங்கள் இருபத்தெட்டு என்பர். வைணவாகமங்கள் பாஞ்சராத்திரம், வைகாநசம் என இரண்டு என்பர். இவைகள் அவ்வச் சமயங்களின் கோட்பாடுகளைக் கூறுகின்றன. சமயக் கோட்பாடுகளே யன்றிச் சமய நிலையங்களின் கூறுகளும் பொருள்களும் கூறுகின்றன. அந்நிலையங்களில் சிறப்பானவை ஆலயங்கள். ஆகவே ஆலய அமைப்பு, அவைகளைக் கட்டும்விதம், அவற்றில் வைக்கும் பொருள்கள், அவைகளை ஆராதிக்கும் முறைகள் நடத்தும் சடங்குகள் முதலிய பல பகுதிகளையும் இவ்வாகமங்கள் போதிக்கின்றன. தற்போது கிடைத்துள்ளவையும் பாராட்டப்படுபவையுமான ஆகமங்கள் வடமொழியில் எழுதப்பட்டுள்ளன. இவைகளைப் படித்துப் பொருளுணர்பவர்கள் ஆலய ஊழியர்களான குருக்களும், பட்டர்களுமே ஆவார். இவர்களில் பலபேர் படிப்புக் குறைவினால் அந் நூல்களைக் கொள்ளாமல் பழைய வழக்கங்களை முன்னிட்டே நடவடிக்கைகளைச் செய்துகொண்டு வருகிறார்கள். இந்தப் பராமுகத்தினால் ஆகமங்களின் சிறப்பே தற்காலத்தில் மறக்

கப்பட்டது. சைவாகமங்கள் 28-ல் காமிகம், காரணம், சுப்பிரபேதம், மிருகேந்திரம் என்பவைகளே சிறந்தவை ஆகும். இவைகளே அச்சில் வெளிவந்திருக்கின்றன. இவைகளும் தற்போது கிடைப்பது அரிதாகிவிட்டன. இவைகளில் ஒவ்வொன்றை ஒவ்வொரு கோயிலும் பின் பற்றுவதாகக் கூறுகிறார்கள். நூலைப் பார்க்காவிடினும் வழக்கப்படி சடங்குகள் வழங்கப்படுகின்றன. (தொடரும்)

இரங்கல் உரைகள்*

1

சைவ சித்தாந்த சமாஜத்தின் 49-ம் ஆண்டு விழாத் தலைமையை வகிக்கும் பொருட்டு 23-12-54 அன்று கொழும்பில் இருந்து விமான மார்க்கமாகத் திருச்சிராப்பள்ளிக்குச் சமாஜ அன்பரொருவருடன் சென்றேன். செல்லும்போதெல்லாம் எனது சமய அறிவு வளர்ச்சிச் சிறுமையைப் பொறுத்துக் கொள்ளும் அளவுக்குச் சமாஜ அதிகாரிகளின் பெருமை உயர்வுடைத்தாய் இருக்குமோ என்ற சிந்தனை மனக் கலக்கத்தைக் கொடுத்துக்கொண்டே இருந்தது. விமானத்திலிருந்து இறங்கியதும், திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் அவர்தம் நண்பர்கள் சிலருடன் என்னை வரவேற்க வந்திருப்பதைக் கண்டதும், அவர்களுடன் சில வார்த்தைகள் உரையாடியபோது, என் சிந்தையில் வளர்ந்த கலக்கம் ஒருவாறு தணிந்தது. முதலியார் அவர்களின் தகைமை அத்தன்மைத்தாயிருந்தது.

பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் சென்னைச் சைவ சித்தாந்த சமாஜத்தின் நற்பெரும் பணிகளுக்கு முப்பது ஆண்டுகளாகச் செயலாளராகவும், பின் தலைவராகவும் அயராது உழைத்த சைவத் திருவாளர். இந்தியாவிலோ இலங்கையிலோ இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு பன்னிரு திருமுறைகளையோ, பதினான்கு சைவ சித்தாந்த சாத்

---

*சென்ற மாத " மயிலை கிழார் நினைவுமலர் " இதழின்கண், காலந்தாழ்த்துக் கிடைத்தமை - இடமின்மை முதலிய காரணங்களாற் சேர்க்க இயலாது எஞ்சி நின்ற இரங்கலுரைகள் இவ்விதழில் வெளியிடப்பெறுகின்றன.

திரங்களையோ சைவ இல்லங்களில் காண்பது முயற் கொம்பாய் இருந்தது. அந்நாட்களில் திருமுறைகளைப் பதிப்பித்த ஒருசிலரும் அவை பொதுமக்களுக்குக் கிடைக்கத் தக்கதாகக் குறைந்த செலவில் பதிப்பித்து விற்கவுமில்லை. அந்நாளில் ஒருசில கழகங்கள் ஆதாயத்தையே குறிக்கோளாகக் கொண்டு சைவ நூல்களைப் பிரசுரித்து விற்பனை செய்தன. இந்நிலையை உணர்ந்த சைவ சித்தாந்த சமாஜத்தினர் சைவத்தின் நிலைக்களனாகி விளங்கும் திருமுறைகளையும் சித்தாந்த சாத்திரங்களையும் அடக்கவிலைப் பதிப்பாக அச்சிட்டுச் சைவ மக்களுக்கு உதவ வேண்டுமெனத் தீர்மானஞ் செய்தனர். அதன் பயனாய்க் கடந்த கால் நூற்றாண்டுகளுக்கிடையில் மேற்கூறிய சைவ நூல்களை அச்சிட்டு மிக எளிய விலையில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வழங்கினார். இப்பணியை நிறைவேற்றுவதில் உறைத்து நின்ற பெரியார் யார்? அவர்தான் 14-3-58ல் சைவ சித்தாந்த சமாஜத்தைக் கவலைக் கடலில் ஆழ்த்திச் சென்ற "மயிலை கிழார்" ம. பாலசுப்பிரமணிய முதலியாராவர்!

இத்தகு பெரியாரைச் சைவ சித்தாந்த சமாஜம் சீரிய முறையில் என்றும் நினைவு கூருதல் முற்றாகத் தகும். சைவ சித்தாந்த சமாஜத்திற்கு ஒரு நிரந்தரமான கட்டிடம் இன்னும் அமைக்கப்படவில்லையென எண்ணுகிறேன். அன்னார் ஆற்றிய தொண்டுகளின் நிலையமாகச் சென்னைமா நகரில் சிறந்த ஒரு கட்டிடத்தை நிர்மாணித்து அதற்கு "மயிலை கிழார் மண்டபம்" எனப் பெயர் சூட்டி என்றென்றும் சைவ சித்தாந்த சமாஜம் நினைவு கூரும் என்பது எனது நம்பிக்கை.

திருவாளர்-பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களின் ஆன்மா இறைவன் திருவடியில் சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

சர். கந்தையா வைத்தியநாதன், முன்னாள் அமைச்சர், இலங்கை.

2

செந்தமிழ், ஆங்கிலம் என்னும் இரு பெரு மொழிகளிலும் புலமையுடையராய், சிறந்த சட்ட நிபுணராய்த் திகழ்ந்த மயிலைகிழார் உயர்திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்து, இறைவன்

றிருவடி நீழல் எய்திய செய்தி கேட்டு ஆற்றெணுத்துயரத்தில் அழுந்தினேன். திரு. முதலியார் அவர்கள் மதிநுட்பமுடைய வக்கீலாயிருந்தும் அத்தொழிலைத் துறந்து, சிவத்தொண்டில் இறங்கினூர்கள். அவர்கள் 1921-ம் ஆண்டு துவக்கம் சென்னை சைவசித்தாந்த மகா சமாசத்தின் செயலாளராய், அமர்ந்து அதன் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாயிருந்து பெருந்தொண்டாற்றி வந்தார்கள். அவரின் இடையரு முயற்சியாலன்றே சமாசம் மேன்மேல் வளர்ந்து உயர்நிலை யடைந்தது. அவர் சமாசத்துக்குச் செய்துபோந்த தொண்டுகளுள், மிகச் சிறப்பானது நூல் வெளியீடேயாகும்.

முதலியார் அவர்களின் அரும்பெரும் முயற்சியால் பன்னிரு திருமுறை, பதினான்கு சாத்திரம், சங்க இலக்கியம், திருப்புகழ், சீவக சிந்தாமணி, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் முதலிய நூல்கள் அடக்கவிலைப் பதிப்புக்களாக வெளிவரலாயின. ஒவ்வொரு பதிப்பிலும் ஆராய்ச்சிக் குறிப்புகள் அதனை அழகு செய்தன.

முதலியார் அவர்கள்பால் சிறந்த நல்லியல்புகளைக் காணலாம். அவர் ஒரு சிறந்த பண்புடையாளராய் வயங்கினூர். முதலியார் அவர்கள் ஓர் அறிவுக்கடல். ஒழுக்க மாமலை. அவர் வாழ்க்கையில் என்னைக் கவர்ந்தது அவர்தம் மாசற்ற ஒழுக்கமே.

> ‘ ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
> உயிரினும் ஓம்பப் படும் ’

என்னும் தெய்வப்புலவர் மறைமொழிக்கு முதலியார் அவர்கள் ஓர் இலக்கியமாக வாழ்ந்தார். அஞ்சாமை, அறிவு, ஊக்கம் முதலிய பண்புகள் நிரம்பப் பெற்றவராய் விளங்கினூர். எத்தகைய நிலையிலுள்ளாரும், எவ்வளவு நெருங்கிய நண்பராயினூரும் பிழைசெய்வாராயின், அவரைக் கடிந்து, சிறிதும் அஞ்சாது இடித்துக்கூறி அவர்தம் பிழையினை நன்கு உணரச்செய்வர். சிலவேளைகளில் அவர் வரம்பு மீறிக் கூறுதலும் உண்டு. அது அவர்தம் தூய பண்பினுல் ஏற்படுவதொன்றாகும். அங்ஙனம் வரம்பிகந்து சென்றவிடத்தும், அவர்தம் நண்பர் அவரின் ஒழுக்கத்தின் உயர்வைக் கண்டு, பொருட்படுத்தாராயினர். அத்தகைய சிறந்த பண்புகளும், நல்லியல்புகளும் வாய்ந்த பெருமகனுரைப்

பிரியலாஞேம். அப்பெரியாரின் பிரிவு ஈடு செய்ய முடியாத தொன்றும்.

முதலியார் அவர்கள் தாம் எடுத்துக்கொண்ட தொண்டினைச் சென்ற ஆண்டு விழாவில் தலைமை வகித்து, இனிது முடித்துக் கொண்டனர். ஆனல் அவர்கள் இன்னும் சில காலம் உயிருடன் வாழ்ந்திருந்தால், சமாசத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்படும் சில காரியங்களையும் செய்து முடிப்பாரென்று நாமெல்லோரும் நம்பியிருந்தோம். அந்தோ! திடுமென மறைந்துவிட்டார். இறைவன் றிருவருள் இருந்துவாறென்னே!!

அப்பெருமகனர் எங்ஙனம் சமாசத்தைப் போற்றிப் பாதுகாத்து வந்தனரோ, அங்ஙனமே நாமும் அதனைப் பேணிப் பாதுகாத்து வருதல் வேண்டும். அதுவே நாம் முதலியார் அவர்கட்கு அவர் செய்து போந்த அளப்பரும் தொண்டுகட்குக் காட்டும் நன்றியாகும். அதுவே அவரை நினைவுகூரும் ஒரு பெரு நெறியாகும்.

மயிலைகிழார் பாலசுப்பிரமணிய முதலியார் சென்ற ஆண்டுவிழாவில் இளமுருகனர் ஆயினர். என்னே அவர் தம் தூய தனித்தமிழ்ப் பற்று! மயிலை முருகனரை எம் அரும்பெரு மரபிற் பெரும்பெயர் முருகன் இப்பூதவீட்டில் இருத்தல் கூடாதென்று, அதனின்றும் அவரைப்பிரித்து, 'ஒரு பூதரும் அறியாத்தனி வீட்டில் உரை உணர்வற்று இருவென்று' அருளிச்செய்தனன் போலும்.

> "ஒருபூ தரும்அறி யாத்தனி வீட்டில் உரைஉணர்வற்று
> இரு,பூத வீட்டில் இராமல்என் றுன்,இருகோட்டு ஒருகைப்
> பொருபூ தரம்உரித்து, ஏகாசம் இட்ட புராந்தகற்குக்
> குருபூத வேலவன் நிட்டூர சூர குலாந்தகனே."

வே. நாகலிங்கம், J.P.U.M., யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை

திருத்தம்: சென்ற ஏப்பிரல் மாத இதழ் 141-ஆம் பக்கத்தில் 19-வதாக வெளியிடப் பெற்றுள்ள இரங்கலுரையின்கீழ் "இராவ்பகதூர் க. அரங்கசாமி முதலியார், பி.ஏ." என்றிருப்பதனை, அருள்கூர்ந்து "சுந்தரவிநாயக முதலியார், இராயப்பேட்டை" என்று திருத்தி வாசித்துக்கொள்ளவும்.

—பத்திராசிரியர்

சன்மார்க்க சித்தியார் (2)

தருமையாதீனப் புலவர்,
முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

சிவஞான வெளியிலே, அவ்வருளே கண்ணாகக் காண்கின்றவர்க்கு எல்லாம் சிவமயமாகி யிலங்கும். பாசப் பொருள்களும் பசுக்களும் சிவமயமாய்ச் சிவமாய்த் திகழும். அத்தகைய பதிமுது நிலைமை அகண்டாகார சச்சிதாநந்த மயமாகும். ஆக, அதனை அந்நியமாக வைத்து வழிபடல், ஆகமநெறியின் அடங்கியதாய் அந்நிய வழிபாட்டிற்குச் சாதனமாக இருத்தல் வேண்டும். அவ்வாறின்றித் தான் தோன்றித் தன்மையில், ஆகமவிதியும் ஆன்றோராசாரமும் அல்லாததாய்ப் படைத்துக்கொண்டு, தன் பழநிலைமையைத் தானும் வளர்த்துக்கொண்டு, பிறர்க்கும் அதைத் தெரிவிக்கும் நிலையில் வழிபாடு செய்துவருதல் எவ்வாற்றானும் பயன் விளைக்கமாட்டாது. என் நண்பரிற் பலரிடம் உள்ள பழக்கத்தைப் பார்த்தே சென்ற இதழில், கண்மூடி வணங்கும் வழிபாட்டைக் குறித்து எழுதினேன்.

7-3-58இல், திருவண்ணாமலையில், என்பால் இளமை முதல் உள்ள அன்பால் என்னை இன்புறுத்தி வருகின்ற நல்லறிஞர் (R. D. O.) திருவாளர், கா. பா. குமாரசாமி முதலியார் அவர்கள், தாம் புரிந்து வரும் வழிபாட்டு முறையைச் சொன்னார்கள். அப்போது அவர்கட்கு இருந்த ஓயாவினையை நோக்கி, வழிபாட்டின் பல்வேறு நெறிகளைக்குறித்துச் சுருக்கியும் சொல்ல முடியாதிருந்தது. அங்கே என் நினைவில் தோன்றியவற்றை யெல்லாம் முறைப்படத் தொகுத்து விளக்கி எழுதினால், பெரியதொரு நூலாகிவிடும். ஒன்று மட்டும் அவர்கள் கேட்கச் சொல்லினேன். அது பழநியாண்டவர் இரட்டை மணிமாலைப்பாடல். அவர்கள் நாள்தோறும் அவரை மறவாது போற்றி வருபவர்கள். விளக்கும் விளக்கொளியும் வேறல்ல, நவரசமும் கூத்தாட்டும் வேறு இரண்டு கூறல்ல. அவ்வாறே பழநியாண்டவரும் என் உயிரும் வேறல்ல.

'வேறோ விளக்கும் விளக்கொளியும்? வேறிரண்டு
கூறோ நவரசமும் கூத்தாட்டும்? நாறுமலர்க்
கள்ளுயிர்க்கும் தென்பழநிக் கந்தன் குருபரன்என்
உள்ளுயிர்க்கு வேற்றுமைஆ மோ ?

இத் திருப்பாடலில் உள்ள வினுக்கள் மூன்றும் என்ன தெரிவிக்கின்றன? முதல் இரண்டு வினவும் மூன்ருவதன் பொருளை உறுதிப்படுத்தி நிற்கும் உவமம் ஆகும். மூன்ருவது வினு உவமேயம் ஆகும்.

விளக்கும் விளக்கொளியும் போன்றும், நவரசமும் கூத்தாட்டும் போன்றும் பழநிக் கந்தனும் அவனை மறவாத உயிரும் அபேதமாகும் என்று அப்பாடல் அறிவிக்கின்றது.

அத்தகைய அபேதஞானநிலை சிலர்க்கே வாய்க்கும். அண்மையில் வெளிவந்த சிவஞானபோத உரையின் ஆசிரியர் சைவப் பெரியார். உயர்திரு. க. அரங்கசாமி முதலியார் B.A. அவர்களும், அவர்களுடைய வாழ்க்கைத் துணைவியார் நிறைநாட் செல்வியார் ஆதிலட்சுமி அம்மையார் அவர்களும் பற்பல யாண்டுகளாக அவ்வழிபாடு செய்து இன்பப் பெருக்கம் எய்தி, உலகில் இருந்துகொண்டே, உலகை மறந்த உயரிய வாழ்வு நடத்துகின்ருர்கள். அபேத நிலை அப்பழநியாண்டவரிடத்தில் அவர் குடும்பத்திற்கு வாய்த்துள்ளது. போதும் என்ற மனம் உடைய அவர் அனைவர்க்கும் புண்ணியமூர்த்தியின் திருவருளாகிய பொன்னைச் செய்துகொள்ளும் பூர்வபுண்ணியம் கை கூடிற்று. இது பலர் அறிந்த உண்மை. அது புலிசை ஞானியார் சுவாமிகளது திருவடித்தொண்டின் உறைப்பாற் பெற்ற பயன்.

பழநியாண்டவரும் அவரை மறவாத உயிரும் அபேதமாஞல், அவரை வழிபடும்போது, உடம்பும் உடம்பின் உறுப்புக்களும் என்ன நிலையில் கருதப்படத்தக்கன? உயிர் ஆண்டவனைபின், உடல் ஆண்டவனது உடலாகாதோ? உயிர்க்குரிய ஊனுடல் உயிர் ஆண்டவனை பின்னரும் அதே நிலையில் இருக்குமோ? உயிரின் இச்சை ஆண்டவனதிச்சையால் மறைந்தது. உயிரினறிவு ஆண்டவனதறிவிலே ஒடுங்கிற்று. உயிர் செய்யுஞ் செயலெல்லாம் ஆண்டவன் செயலாயின. இச்சாஞானக் கிரியை மூன்றும் ஆண்டவனுடையவாய், உயிரின்கண் நிகழ்கின்றன. இந் நிலையே பசுகரணம் சிவகரணமானநிலை. உயிர்தான் ஒரு பொருள் எனத் தனித்து நில்லாது ஆண்டவனுய் விட்டது. அந் நிலையில், உடம்பு சீவனுடலா? சிவனுடலா? சீவனுடலாயின், கண்ணை மூடிஞலும் திறந்தாலும் சீவனே முனைத்து நிற்கும். சிவனுடலாயின் கண்ணை மூடிக் காண்பவன்

யாவன்? காணப்பெறுமவன் யாவன்? இடையே கண் வழியாக நின்று காட்டுவது யாது? காணுங் காட்சி எத் தகையது? பேதக்காட்சியா? அபேதக் காட்சியா? அந்நியக் காட்சியா? அநந்நியக் காட்சியா? அவை முதலிய எல்லாம் ஆதியும் அவை அல்லனவும் ஆகும். அப்பழநியாண்டவனது நிலை என்ன?

" கருவிமெய்ப் புலன் காட்டுவான் காண்பவன் காட்சிப்
பொருள்எ னப்படும் நான்மையும் ஐவகைப் பொறியும்
இருதி றத்தியல் வினைகளும் காலமும் இடனும்
மரபின் முற்றுறு பயனுமாய் நின்றனன் வள்ளல் "

" வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரித்த
போதக் காட்சிக்கும் காணலன் புதியரிற் புதியன்
மூதக் கார்க்கும்மூ தக்கவன் முடிவிற்கும் முடிவாய்
ஆதிக் காதியாய் உயிர்க்குயி ராய்நின்ற அமலன் "

" கூறும்மற் றினைய தன்மை குரைகடல் உலகம் திக்கு
மாறிலாப் புவனம் அண்டம் வானவர் உயிர்கள் யாவும்
ஆறுமா முகத்து வள்ளல் மேனியில் அமைத்ததன்றி வேறிலை "

என்னின், வேறாகக் காணும் பேதக் காட்சியும் கண்மூடிக் காணும் காட்சியும் என்ன பயன் விளைக்கும்? " அறிவரும் உணர்தல் தேற்று ஆறுமா முகத்து வள்ளல்" கண்மூடினல் காணக்கிடைப்பாராம். கண்ணைத் திறந்து கண்டால் காணக்கிடையாராம். இப்படியும் ஒரு வழிபாடு ஏற்பட்டு விட்டது.

கண்ணை மூடியதால் விளைந்ததைக் கச்சியேகம்பன் திருக்கண்ணைக் காமக் கண்ணி மூடிய திருவிளையாடலால் உணரலாம். தாருகவனத்துப் பெண்டிர், ' அண்ணல் மேனி கண்டு ஆர்வம் உற்று...கண்ணை மூடியும் கைக்கடங்காமை யால் விண்ணை மூடினர்போல் வெள்கினர்' என்று கச்சி யப்ப சிவாசாரியார் நகைச்சுவை விளையப் பாடியதும் ஈண்டு நினைக்கத்தகும்.

" பொறியிலுறு புலன்அவித்து நவைநீக்கிக் கரணஇயல்
போக்கி ஆசான்
குறிவழியே தலைநின்று மூலவெழுத் துடனேர்ந்தும்
கொளுவி எண்ணி

அறிவுதனில் அறிவாகி உயிர்க்குயிராய்ப் பரம்பொருளாய்
அமலம் ஆகிச்
செறிதருகண் ணுதற்கடவுள் அடிபோற்றி அவனுருவைச்
சிந்தை செய்தான் ''

(கந்தபுராணம் - கயமுகனுற்பத்தி - 72)

என்று, அவ்வாசிரியர் உணர்த்திய வழிபாட்டு வகையொன்றில், 'பொறியில் உறு புலன் அவித்து' என்றதன் உண்மை என்ன? கண்ணும் ஒரு பொறி அன்றோ? கட்புலன் ஆவது பார்வைதானே? அப்பொறியையும் புலனையும் அவிப்பது எப்படி? கண்ணை மூடினால் அவிந்திடுமோ? ஏன் கண்ணவிதல் வேண்டும்? அகக் கண்ணைத் திறந்தவர்க்கு அருள் ஒளியாய்த் தன்னை விளக்கி, உலகினை விலக்குவான் இறைவன் என்று . சாத்திரங்கள் எல்லாம் சாற்றவும், அழியும் உலகம் அகத்தில் நிலைக்கும் என்று எண்ணிக் கண்ணை மூடிக்கொள்வது என்ன காரணத்தாலோ?

" உளக்கண் விழித்தார்க்கு உறும்கதிராய் உன்னை
விளக்கிச் செகவிருளை வேறாய்—ஒளிப்பைஎன
மாயும் செகம் உளத்து மன்னும்எனக் கண்ணைமறைத்து
ஆயும்மருள் ஏதாம் அறை'' (சன்மார்க்க சித்தியார் - 4).

நிட்டை இருவகைப்படும்; உண்மை நிட்டை, உபாய நிட்டைஎன்று.

மும்மலமும் அற்று, மெய்யருளாகி, அதனையும் கடந்து சிவமாயிருப்பது உண்மை நிட்டை. நிட்டை அடைந்தோர் மீண்டும் அது பெறவேண்டிச் செய்யும் அனைத்தும் உபாயம் ஆகும். அச்செயலும் சிவாகம விதியின் அமைந்து கிடத்தல் வேண்டும். மனம்போலக் கொண்டு செய்தல் பயன் விளைக்காது. அகம்புறம் இன்றி எங்கும் ஒரு நிலையாகக் கண்டு இறை நிறைவில் அழுந்துவது நிட்டை. பண்டைப் பயிற்சி மிகுதியாற் சுட்டறிவு பற்றிப் பிரபஞ்சம் காட்சிப் படவரின், அது நீங்கி அவ்வுண்மை நிட்டையில் உறைத்து நிற்றற்குச் செய்யும் உபாயம் சாத்திரங்களிற் கூறப்பட்டுளது. சிவஞானபாடிய வசனம் :—

"எல்லா மலங்களும் பற்றறத் துடைத்து உண்மை ஞானத்தைத் தலைப்பட்டார்க்கு, உடம்புள்ளளவும் பிரா

ரத்த வினை அவ்வுடம்பை ஒட்டி நிற்றலான், அஃது அவர்க்கு ஓரோ வழி வாதனை வயத்தால், இங்குளி வாங்கும் கலம் போல வந்து தாக்கும். தாக்குங்கால் 'பிற்செயாது அநுபவிப்பதின்று ஆகலின், அது சார்பாக விருப்பு வெறுப்புக்கள் உளவாம். அவை உளவாகவே பரமே பார்த்திருப் பார்க்கு நிலம் முதல் மாயா தத்துவம் ஈறாகிய ஏகதேசப் பொருள் காட்சிப்படும். அவை காட்சிப்படவே, அவற்றைச் சுட்டி யறிவதாகிய திரிபுணர்வு மேற்படும். அது மேற்பட்டு மெய்யுணர்வைக் கீழ்ப்படுக்கும். கீழ்ப்படுத்திப் பிறவிக்கு வித்து ஆகும். 'இயல்பான நிட்டையின் வழுவு மாறு இது.''

சிவஞான சித்தியாரில், 'இந் நிலைதான் இல்லையேல்' எனத் தொடங்கும் திருவிருத்தம் உபாயநிட்டை உணர்த்தத் தொடங்குதலையும் முன்னைய நிலையை 'இந்நிலை' என்று சுட்டி உண்மை நிட்டையைக் குறித்தலையும் அறிதல் வேண்டும். பதினொன்றாவது சூத்திரத்தின் முடிவில் 'உண்மை நிட்டையநுபவத்தை உணர்த்துவதும் உணர்க. உண்மை நிட்டையை உணர்ந்தோர் உணர்த்தியவாறு உணர்ந்து உபாயங்களை அநுட்டிப்பதே உண்மைப் பயனை உதவும்.

மாயா தேகத்தை மந்திர தேகமாக்கி வழிபடுவதும் உபாயம். மந்திர தேகத்தை ஞானதேகமாக்கி வழிபடுவதும் உபாயம். ஞானதேக வழிபாட்டுள்ளும் நுண்ணிய பிரிவுண்டு. இவ்வேறுபாட்டால், ஊனதேகத்துக் கண்ணை மூடினும் திறக்கினும் தம் வழிபாட்டுக்கு முறையே நன்றும் தீதும் எய்தும் என்று கொள்ளுதல் பொருந்தாமை புலனாகும்.

மாயாதேகம் போக்குவதே பூதசுத்தி. மந்திர தேகம் வித்தியா தேகம் ஆக்குவதே நியாசம். பசுகரணம் சிவ கரணம் ஆக்குவதும் இவ்வுண்மை குறித்தேயாகும்.

" மலம்அடைய மாயா தனுவினையும்; அந்த
மலம்இடையக் காயம் மனுவாம் ;—நலம் உடைய
ஆக்கைஅறக் காயம் அருட்டணுவாம் ; ஓர்தனுவில்
தாக்கியமெய்ப் பாவகத்தால் தான் ''

(உபாய நிட்டை - வெண்பா - 36)

*" அம்பகத்தை மூடிஅருள் ஆய்வதுவோ? நூல்ஓதிச்
செம்பொருளைக் கேட்டுத் தெளிவதுவோ ?—நம்பன்அருட்கு
ஏற்ற உபாயமிட்டை ஏதாகும் ? மும்மலத்தைப்
பாற்றுவாய்! ஒன்றைப் பகர் " (சன்மார்க்க சித்தியார் - 5

(தொடரும்)

மதிப்புரை

பொய்யடிமை இல்லாத புலவர் யார் ? : ஐயத்தின் நீங்கித் தெளிய இயலாத அரும்பொருள்களாய் நெடுங்கால மாக நிலவி வரும் செய்திகள் தமிழறிஞர் உலகிற் சில உண்டு. அவற்றுள் 'பொய்யடிமை இல்லாத புலவர் யார்' என்பதும் ஒன்றாகும். சென்னை இராயப்பேட்டைப் புதுக் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர் வித்து வான் பாலூர் கண்ணப்ப முதலியார், பி.ஓ.எல்., அவர்கள், இப்பொருள் குறித்து ஆராய்ந்து முடிபு காண இந்நூலின் கண் முயன்றுள்ளார்கள்.

பேராசிரியர் திரு. பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்கள், தமிழாசிரியத் துறையிற் பல்லாண்டுகளாகப் பணி புரிந்து முதிர்ந்த அனுபவம் பெற்று விளங்குவதோடு, சிவநெறி யின்பால் மிக அழுந்திய பெரும்பற்றும் ஈடுபாடும் மிக்க வராய்ச் சிறந்து திகழ்ந்து வருபவர்கள். அவர்கள், பல தடை விடைகளை நிகழ்த்திக்கொண்டு, இந்நூலைத் தெள்ளிய இனிய நடையில் திறம்பட இயற்றியுள்ளார்கள். மறைமலை அடிகள், உ. வே. சாமிநாத ஐயர், கா. சுப்பிரமணியபிள்ளை, பொன்னம்பலம் பிள்ளை, திருமலைக் கொழுந்துப் பிள்ளை, கே. ஜி. சேஷையர், 'சிவக்கவிமணி' போன்ற பல பேரறி ஞர்களுடைய கருத்துக்கள் - நூல்களின் திரண்ட பெரும் பிழிவாக இந்நூல் சிறப்புற இயன்றுள்ளது. மணிமொழி யார் தேவார ஆசிரியர்கள் மூவருக்கும் முற்பட்டவர் என வற்புறுத்தி நிறுவியிருக்கும் பகுதியும், மேற்கோட் பொரு ளுக்கு மிக்க இயைபின்றாயினும், திருத்தொண்டர் புராணத் தில் திருவாசகத் தொடர்கள் பயின்று போந்துள்ள இடங் களை எடுத்துக்காட்டி விளக்கி யிருக்கும் பகுதியும், பெரிதும்

---

*அம்பகம் - கண்.

பாராட்டற்பாலனவாகப் பிறங்குகின்றன. சேக்கிழார் சுவாமிகள் திருவாசகத் தொடர்களைப் போற்றியுள்ள இடங்களை எடுத்துக் காட்டி யிருப்பதுபோல, சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாசகத்தின்கண் ஈடுபாடு கொண்டிருந் தனரா என்பது குறித்தும் விளக்கியிருந்தால், நூலின் முடிபு மேலும் நன்கினிது வலிவு பெற்றிருக்கும் என்பது திண்ணம்.

அறிவராய்ச்சித் துறைகளிற் கருத்து வேறுபாடுகள் நிகழ்தல் இயல்பே யாதலால், நூலின் முடிபினை ஏற்க ஒரோ வழி இசையாதாரும் கூட, நூலின் போக்கினைற் புலனுகும் ஆசிரியரின் அரிய புலமையையும், ஆராய்ச்சி நெறிப் பண் பினையும், அழுந்திய சிவநெறி யுணர்வையும் சிறந்தெடுத்துப் போற்றுவர் என்பதில் ஐயமில்லை. இவர்கள் இனைய பல அரிய இனிய சிவநெறி ஆய்வு நூல்களை இயற்றித் தமிழகத் திற்கு அளிக்கச் சிவபிரான் திருவருள் துணை செய்வதாக! (இந்நூலின் விலை : 1=25. விற்பனை உரிமை : குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை, 1.)

‘போய்யடிமை இல்லாப் புலவர் யார்?’என்பதுதான்
ஐயமற ஒல்லா அரும்பொருளாம்!—மெய்யதனைப்
பாலூர்நற் கண்ணப்பர் பண்பின்ஆய்ந் துள்ளதிறம்
மேலோர்க் குவப்பாம் மிக!
—முருகவேள்

திருப்போரூர்ச் சந்நிதிமுறை

சமாஜ இரண்டாம் பதிப்பு, ஆராய்ச்சி அகராதி, அரும் பதவுரை, குறிப்பு, பாட்டு முதற்குறிப்பு முதலியவற்றுடன் கூடியது. ராப்பர் பைண்டு விலை அணு பன்னிரண்டு.

திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி

திரு. ரா. சண்முகசுந்தரம் செட்டியார் எழுதிய உரையும், திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் எழுதிய அணிந்துரையும் கொண்டது. சமாஜப் பொன்விழா வெளி யீடுகளுள் ஒன்றாகப் பதிப்பிக்கப்பெற்றது. 176 பக்கங் கொண்டது. விலை ரூபா ஒன்று, ரிஜிஸ்தர் தபாற்கூலி அணு ஒன்பது. தபாற்கூலி வேறு.

கிடைக்கும் இடம் : பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1